

யாழ்ப்பாணம் அராலி குலனையைப் பிறப்பிடமாகவும்
சித்தங்கேணி கலைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் தவமணி தணிகாசலம் அவர்களின்

சிவப்பேறு குறித்த

# ஞாபக மலர்

11-03-2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத் தலைவியாய்
அன்போடும் பண்போடும்
எமைப் பேணிப் பாதுகாத்து வழி
நடத்தி வாழ்வாங்கு
வாழவைத்து இன்று
வானுறைந்து விட்ட எமது
அன்புத் தெய்வத்தின் பாதார
விந்தங்களில் இம் மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தோற்றம்**
**1922.08.02**

**மறைவு**
**2006.02.09**

# அமரர் திருமதி தவமணி தனிகாசலம் அவர்கள்

## திதி வெண்பா

சீர்பூத்த பார்திப ஆண்டு தமிழ்த் தைத்திங்கள் வியாழன்
திருவாதிரை நட்சத்திரத்தன்று உயர்பூவை நல்லாள் நம்தவமணி அம்மையார்
துவாத சித்திதி இருபத்தேளாம் நாள் பூர்வபட்சம் அதில்
பாரினின்றுநீங்கி இறைவனார் சேவடியில் தேவுண்ட நல்லதிதியாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங்கேட்டாள்
பின்னையவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தாள் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அணையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூறெனக் குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
வம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையு மாறிசையே

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்
ஆதி அருணாசலமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி தவமணி தணிகாசலம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழமணித்திருநாட்டின் மணிமுடிபோல் திகழும் யாழ்ப்பாண நன்நகரில் உள்ள அராலி என்னும் கிராமத்தில் குலனை எனும் இடத்தில் இல்லறமே நல்லறமாக நடத்திய நாகலிங்கம் பத்தினியம்மா தம்பதிகளுக்கு மகளாக 02.08.1922இல் தவமணி அவர்கள் அவதரித்தார். இவரது உடன்பிறப்புக்களாக திரு.நா. முத்துச்சாமி திரு. நா. சின்னத்துரை, செல்லம்மா, இராசம்மா போன்றோர் கிடைக்கப்பெற்றனர்.

திருமதி தவமணி அவர்கள் இளமையிலேயே இறைபக்தியும், சிறந்த பண்புகளும் உடையவர். தன் குடும்பத்தவருடன் மிக நேசமாகப் பழகி வாழ்ந்து வந்தவர் என்று அனைவரும் பேசிக் கொள்வார்கள். தன் இளமைக்கல்வியை அராலி அமெரிக்க மிசன் பாடசாலையில் கற்றுத் தேறினார்.

இவர் திருமணப் பருவம் அடைந்ததும் இவரை திரு. கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் மகன் தணிகாசலம் அவர்களைப் பெற்றோர் மணம் செய்து வைத்தனர். இவரது அருமை மைத்துனராகத் திரு. கனகலிங்கம் அவர்களும், மச்சாள்மாராக நல்லமணி, செல்வமணி, செல்வ நாகேஸ்வரியம்மா போன்றோரும் கிடைக்கப்பெற்று இல்லறமே நல்லறமாக வாழ்ந்து மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் 13.02.1956இல் அருமைப்புத்தினராக திரு. த. சண்முகலிங்கம் அவர்கள் பிறந்தார். ஏகபுத்திரனாகிய சண்முகலிங்கம் அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபிள்ளையிலேயே நற்பண்புகள் நிறைந்தவர் மட்டுமன்றி கல்வி கேள்விகளில் வல்லவராகவும் திகழ்ந்தார். தன் கல்வி யா/ யாழ்ப்பாணக் கல்லூரியிலே கற்று க.பொ.த. உயர்தர வகுப்பில் சிறந்த பெறுபேறு பெற்று விஞ்ஞானப்பட்டதாரியாகி, தற்போது யா/ வட்டுஇந்து நவோதயக் கல்லூரியில் பௌதிகவியலைச் சிறப்பாகக் கற்பிக்கும் ஆசிரியராகவும், வள ஆளணியாளராகவும் கடமையாற்றுகின்றார். திரு. த. சண்முகலிங்கம் அவர்கள் இரத்தினேஸ்வரி அவர்களைக் கைப்பிடித்து மகனாக நிசாந்தன் கிடைக்கப் பெற்று அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு பெருமையுடன் வாழ்ந்து வந்த தவமணி அவர்களுக்கு வாழ்வில் நோய் என்று பெரிதாக ஏற்பட்டதில்லை. எல்லோருடனும் கலகலப்பாக பேசியபடியே இருப்பார். தன் மகன் சண்முகலிங்கம் அவர்களிடம் அலாதிப்பிரியம் எந்நேரமும் தம்பி! தம்பி! என்றே கூப்பிட்டபடி இருப்பார்.

ஆனாலும் "பிறந்தோர் இறப்பது நியதி" என்பதற்கிணங்க அவருக்குக் காலனின் கடைக்கண்பார்வை பட்டுவிட்டது. கைப்பிடித்த கணவன் கதறியழ, பெற்ற மைந்தன் துடிதுடிக்க, மருமகளும், பேரனும் துயரமுற இறைவன் அவரை 09.02.2006 வியாழக்கிழமை எடுத்துச் சென்று விட்டான்.

தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் குடும்பம் என்று ஐம்புலமும் அவதானமாய் கடமையாற்றி திருமதி தவமணி தணிகாசலம் அவர்கள் எல்லோரையும் விட்டுச் சென்று விட்டார். அவரது பிரிவு யாவர்க்கும் துயர் தருவதாகும்.

எல்லோரிலும் பாசம்மிக்க அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணுலகம் விரைந்தாரே...........

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்டதாய்" எனும் முதுமொழியின் கூற்றுக்கிணங்க, ஆசிரியர் திரு. த. சண்முகலிங்கம் அவர்களின் கற்பித்தல் திறனையும், அவரிடம் கற்றுப் பல்துறைகளிலும் சிறந்து விளங்கும் மாணவர் கூட்டத்தையும் பற்றி நேரில் கண்டும் கேட்டும் அறியும்போது தாயின் மனம் பெரிதும் மகிழ்ந்திருக்கும். தான் செய்ய வேண்டிய கடமைகளை உரிய காலத்தே செய்து இறைவன் அழைப்பிலே விண்ணுலகம் சென்று விட்டார் அம்மா அவர்கள்.

**"வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்**
**நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள் உ பால்தெளிக்க**
**எல்லோரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்**
**எல்லாம் சிவமயமே யாம்"**

— பட்டினத்தார் பாடல்.

திருமதி தவமணி தணிகாசலம் அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதுடன் ஆசிரியர் திரு. த. சண்முகலிங்கம் அவர்கட்கு ஆறுதலைத் தர இறைவனை வேண்டுகின்றோம்.

வலிகாமம் கல்வி அலுவலகம்
மருதனார்மடம்.

**திரு. S. சுகுமார்**
**உதிக்கல்விப்பணிப்பாளர்**
**(கணிதம்)**
**திரு. S. விஜயேந்திரசர்மா**
**உதவிக்கல்விப்பணிப்பாளர்**
**(விஞ்ஞானம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பின் உறைவிடம் ஒன்று அணைந்து விட்டது

எம் கல்லூரியின் ஆசிரியர் திரு. த. சண்முகலிங்கம் அவர்களின் பாசம் மிக்க அன்னை திருமதி தணிகாசலம் தவமணி அவர்கள் விண்ணுலகை அடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு நான் மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். "மண்ணில் பிறப்பவர் மறைவது நிச்சயம்" என்பதை யாவரும் அறிவர். எனினும் "தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை" என்ற வாக்கைக் கடைப்பிடித்தொழுகிய மைந்தன் திரு. த. சண்முகலிங்கம் அவர்களுக்குத் தாயாரின் பிரிவு தாங்க முடியாத தொன்றாகும் என்பதை மறுக்க முடியாது.

திருமதி தணிகாசலம் தவமணி அவர்கள் அன்பால் எல்லோரையும் அரவணைப்பவர். பண்பாக மற்றவர்களுடன் இன்முகத்துடன் பழகுவர். வீட்டிற்கு எவர் வந்தாலும் அவர்கள் மனம் குளிர விருந்து கொடுக்காமல் அனுப்பமாட்டார். அன்னாருக்குச் சிறந்த அறிவுமிக்க தனயன் கிடைக்கப் பெற்றுள்ளார். தாயைப்போலவே சகல குணநலன்களும் தனயனிடம் காணப்படுகின்றதை நான் அறிவேன். உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவதே இல்லாத நற்பண்புமிக்க மகன் அன்னாருக்குக் கிடைக்கப் பெற்றமை பெரும் பேறாகும். எனவே அன்னாரின் ஆத்மசாந்தி பெறும் என்பது திண்ணம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் ஆறுதல் அடைய இறைவனை வேண்டி ஆத்ம சாந்தியடையப் பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**திரு. ச. இராமலிங்கம்**
**அதிபர்**
**யா / வட்டு இந்து நவோதயக் கல்லூரி**
**சித்தன்கேணி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எம்மையெல்லாம் மீளாத்துயரில் மூழ்கச்செய்து
மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத்தலைவி தவமணி
தணிகாசலம் மறைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து பல
வழிகளிலும் உதவி புரிந்த அயலவர், உற்றார்,
உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகளைத்
தொலைபேசி மூலமும் நேரிலும் தெரிவித்த அன்பு
நெஞ்சங்களிற்கும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியங்களில்
கலந்துகொண்டு ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்தித்தவர்களுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டு
உதவிய சங்கானை திருமொழி அச்சகத்தினருக்கும் வேறு
பலவழிகளில் எமக்குதவிய அனைத்து அன்பு
உள்ளங்களிற்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறோம்.

நன்றி.


இப்படிக்கு
கணவன், மகன்,
மருமகள், பேரன்

கலைநகர்,
சித்தன்கேணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# | விருட்சம்

கதிர்காமு

நாகலிங்கம்
+
பத்தினியம்மா

ரியம்மா

முத்துச்சாமி செல்லம்மா சின்னத்துரை இராசம்மா தவமணி

சண்முகலிங்கம்
+
இரத்தினேஸ்வரி

நிஷாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org